சிவமயம்

Registered as a News-paper in Ceylon

P. M. G. NO. H. A 59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னேந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணவருஷ கார்த்திகைமீ ௨௧ உ (1944 நவம்பர்மீ 27 திங்கட்கிழமை) [இல ௬௪

அடுத்த பிரிட்டிஷ் பிரதமமந்திரி யார்?

மிஸ்டர் அந்தோனி ஈடன் வரலாம்!

சேர்ச்சிலை ரோறி இளைஞர்களுக்குப் பிடிக்கவில்லை

ஐரோப்பாவில் யுத்தம் முடிந்ததும் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெறுவது நிச்சயம். தேதி நிர்ணயம் ஜெர்மனியின் தோல்வியைப் பொறுத்திருக்கிறது. எல்லோருக்கும் குழப்பத்தை உண்டுபண்ணும் விஷயம் யார் அடுத்த பிரதமமந்திரியாக வருவார் என்பதுதான். ரோறிக்கட்சி வெற்றி பெற்றால் இப்பொழுது சேர்ச்சில் யுத்தத்தை நடத்தும் விதத்திலிருந்து அவர்தான் பிரதம மந்திரியாக வரலாம் என்பதாகச் சொல்லலாம். எனினும் இளைஞர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு சேர்ச்சில விலகிக்கொள்ள வேணடும்என்ற கருத்துத்தான அதிகரித்து வருகிறது.

லண்டன், நவ 26

கனடாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனராக விருக்கும் மிஸ்டர் மாக்கம் மக்டொனல்ட் போனவாரத்தில் இந்த இரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளார். சேர்ச்சிலுக்குப் பிறகு மிஸ்டர். அந்தோனி ஈடன்தான் அநேகமாகப் பிரதம மந்திரியாக வரலாம் என்று அவர் சொன்னார். இப்படிச் சொன்னதற்கு வருந்துவதாக மாக்கம் மக்டொனல்ட், மிஸ்டர் சேர்ச்சிலிடம் பின்னர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இப்படி இருந்தபோதிலும் நடந்தது நடந்துவிட்டது. எதிர்காலத் தலைவராறி ரோறி இளைஞர்கள் அடிக்கடி தங்களுக்குள் விவாதித்து வருகின்றனர். "இடதுகுகுகவர்ச்சியான தோற்றமுடையது. பாராளுமன்றப் பிரமுகர்களுக்கிருக்க வேண்டிய சமயோசிதத்துக்கும் குறைவில்லை. யுத்தகாலத்தில் இவர் செய்த வேலை அவருடைய அந்தஸ்தையும் மதிப்பையும் சந்தேகமின்றி உயர்த்தியிருக்கிறது" என்று ஒரு ரோறி இளைஞர் குறிப்பிட்டார்.

ஈடனை அவ்வளவாக விரும்பவில்லை என்றாலும் ஷியதனத்தை ரோறிக் கட்சி முதிய அங்கத்தவர்கள் மறைக்கவில்லை. அவர் கொஞ்சம் க்ஷேபவாதியாக விருக்கிறாராம்.

பிரதமமந்திரி பதவி விஷயத்தில் ஈடனுக்குப் போட்டியாக, முன்பு பிரதம மந்திரியாகவிருந்த லோட் பால்டுவின்குமாரரான கப்டன் பால்டுவின், துணைப்பிரதம மந்திரியாகிய ஹிந்திய உதவிக் காரியதரிசியும் உபபிரதம மந்திரியுமான மிஸ்டர் பட்லர் பெயர்களும் வலுவுடனிருக்கின்றன.

பட்லருக்குத்தான் சந்தர்ப்பங்கள் அனுகூலமாக விருக்கின்றன. அதாவது கட்சித் தலைவர்களுடன் நேசங்செய்து கொள்ளும் பழக்கத்தில் பட்லர் மிகவும் கைதேர்ந்தவராம். இவரை ஈடன் கட்சித் தலைவர்களை மதியாமல் இருப்பது தெரிந்த விஷயம்.

டௌனிங்தெரு 10ம் இலக்க வீட்டில் (பிரதமமந்திரியாக வருபவர் வசிக்கும் மாளிகை) யார் குடியேறுவார்கள் என்பதுபற்றிய தொழிற்கட்சிப் பிரமுகர்கள் கூட ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அடுத்த தேர்தலில் தங்கள் கட்சி வெற்றிபெறும் என்று தொழிற்கட்சித்தலைவர்கள் நினைப்பதாகவே தெரியவில்லை. எப்படியாவது தப்பித்தவறி வெற்றி பெற்றுவிட்டால் கட்சித் தலைவரான மேஜர் அட்லி பிரதம மந்திரியாக வரலாம்.

கூர்மையான சாமர்த்தியம் படைத்த உள்நாட்டுக் காரியதரிசி சேர்பர்ட்மொறிசன், 1950ல் நடைபெறும் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றுப் பிரதம மந்திரியாக வரலாம் என்று மனதில் திட்டம் போட்டுக்கொண்டு இப்பொழுதுதான் வேலைசெய்கிறார்.

மகாத்மாவின் இலக்கு

வார்தா நவ 20—

மகாத்மா காந்தி ஆமதாபாத் முனிசிபல் சபை இளைப்பாறிய தலைவர் டாக்டர் ஹரிபிரஸாத் தேசாய் மூலமாய் ஆமதாபாத் ஜனங்களுக்காக குஜராத்தியில் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

மகாத்மா அக்கடிதத்தில் கூறியிருப்பதாவது:—

ஆமதாபாத் மக்கள் பின்கண்ட விஷயங்களை நிறைவேற்றி, நான் பேற்றி வளர்த்துவந்த கனவை நனவாக்கினால் நான் உண்மையிலேயே திருப்தியடைவேன். தீண்டாமையை வேரோடு களைந்தெறியவேணடும்,

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாய் வாழவேணடும்.

ஆண்களும் பெண்களும் திட்டமான வாழ்க்கையை நடத்தவேணடும்.

ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசம் மறையவேணடும்.

ஜனங்கள் வழக்மோக கதராடை அணியவேணடும்.

குடிப்பழக்கமும் சூதாட்டமும் ஒழிக்கப்படவேணடும்.

ஜனங்கள் உள்ளும் புறமும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேணடும்.

ஆமதாபாத்தில் எவரும் பட்டினி இருக்கக்கூடாது.

மேற்சொன்ன விஷயங்களை உங்களால் சாத்தியமானவரை நிறைவேற்றுங்கள். வேறு என்ன வேணடும்? உங்களுக்கு எனது ஆசி.

சாம்ராஜ்ய அரசியல் திட்டம் தயாரிப்பதென்று தீர்மானம்

சிங்கள மகாசபைக்கு பலமான கண்டனம்

சென்ற வியாழக்கிழமை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி தலைமையில் அரசாங்கசபை கூடியபொழுது சுசங்கரடி பொன்சேகா தீர்மானத்தின் மீது மீண்டும் விவாதம் நடந்தது.

சுதேசாரோக்கிய மந்திரி ஸ்ரீ ஜயசூர்ய ஈ. டி. சில்வா பின்வருமாறு பேசினார்:

இலங்கை மக்களனைவரும் ஒற்றுமைப்பட வேணடுமென்பதற்காகவே வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை டொனமூர் கமிஷனர்கள் ஒழித்தார்கள். அரசியலைச் சீர்திருத்துவதற்கு முன்பு நம்மை முதலில் நாம் சீர்திருத்திக்கொள்ளுவது இப்போது அவசியமாயிருக்கிறது. வகுப்புவாதம் தலைவிரித்தாடச் சில ராஜீய வாதிகளே காரணமென்று நான் கருதுகிறேன். வகுப்புவாதக் கூச்சலை ஆங்குரார்ப்பணம் செய்தது ஸ்தலஸ்தாபன மந்திரியான ஸ்ரீ பண்டாரநாயகாதான். சிங்கள மகாசபையை இனியாவது கலைத்துவிடும்படி அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சிறுபான்மையோர்களுடன் பெரும்பான்மையோர் ஒத்துழைக்கவேணடும். ஐம்பதுக்கைம்பது முறையை நான் அழுத்தமாகக் கண்டிக்கிறேன். அனுராதபுரப்பிரதிநிதிவாது சமூக சேவையின் காரணமாகத் தெரிவுசெய்யப்பட்டவரேதவிர வகுப்பு பாசத்தினாலல்ல.

ஸ்ரீ தாமஸ் அமரசூரியா பிறகு பேசியதாவது:- லோயலரி கமிஷனை பகிஷ்கரிப்பது புத்திசாலித்தனமல்ல. அதனால் மந்திரிகளைச் சமர்ப்பிக்க ஏற்கெனவே சபைக்கு வெளியிலுள்ள பல பிரபல சங்கங்களுக்கு தலைவர்கள் முன்னணியாடு செயலாற்றிக்கொண்டிருக்கையில் சமூக ஐக்கியத்தை செய்வதுதான் புத்திசாலித்தனமானது. சுதந்திர ஆலோசக அரசியல் திட்டத்தைப்பெற முடியாமற் போய்விட்டால் சபையழுதல் வாடுதலுமாகும் போராட்டத்தை எல்லோரும் ஒருமுகமாக அவரை ஆதரிக்கவேணடுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ பி. டி. எஸ். குலரத்ன பிறகு பேசுகையில் திருகோணமலை பிரதிநிதி பிரிட்டிஷாரைப்பற்றிப் பேசுகையில் தவறு ஒன்றுமில்லையென்று சொல்லி பிரிட்டன் மெஜாரிட்டி ஆட்சியுரிமையால் அப்பொழுது உலகளாவிய எப்படியிருக்கும் என்றும் மேஜர் ஓலட்டுக்கு விளக்கினார். பிரிட்டிஷார் இலங்கையிலிருந்து வெளியேறவேணடுமென்று திருகோணமலை பாராளுமன்றத்தில் சுறுப்பதாக அர்த்தப்பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையிலிருந்து நீங்கவேணடுமென்பதுதானன்று, இலங்கைக்கு பாட்டுமுறை பொறுப்பு ஆளுகை முடியாதென்றும் சொல்லி தீர்மானத்தை ஆதரித்தார்.

தொடர்ச்சி 5 பக்கம்

அமெரிதுரையின் மானம் போகிறது

லண்டன், நவ. 25

மிஸ்டர் அமெரிக்கு மானபங்கம் ஏற்பட்டுவிட்டதா? பாராளுமன்ற அங்கத்தினர்கள் வட்டாரங்களில் இக்கேள்விதான் அடிக்கடி கேட்கப்பட்டு வருகிறது.

லோர்ட் மவுண்ட்பாட்டனின் இந்தியா விஜயத்தின் பயனாகவே இக்கேள்வியை அவர்கள் கேட்டு வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சைன்யங்களின் நிலைமையைக் குறித்து லோர்ட்மவுண்ட்பாட்டன் கூறுவது சமயத்தில் பிரிட்டிஷ் அரசியல்வட்டாரங்களின் திரைமறைவிலேயே ஒரே பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

லோர்ட் மவுண்ட்பாட்டன் இந்தியாவிலிருக்கும் பொழுதே இவ்விதம் கூறுவாரானால், அவர் இங்குதிரும்பி வந்ததும் எவ்வளவு கடுமையான அபிப்பிராயம் வெளியிடுவார்? என்ற கேள்விதான் பெரிய கேள்வியாக விருக்கிறது.

லோர்ட் மவுண்ட்பாட்டன் பார்வையிட்ட சில விஷயங்கள் அரைவேக்காடாக்கப்பட்டுவிட்டனவாகவிளங்குகிறது.

மரணத்தை விளைவிக்கும் பொறாமை

இரு சேவையிலாளிகள் மோதியதன் விளைவாக ஏவலாளிகளிலொருவரிலிருந்த திரு. ஜிபாஜ்பவ் உடனே மரணமானவராகத் தெரிவிக்கப்பட்டிருந்ததல்லவா? அவருடையபிரேதத்தின்மீது யாழ்ப்பாண நீதிபதி மரணவிசாரணை நடத்தியபொழுது இரு லொறிகளின் சாரதிகளும் இதரசாட்சிகளும் வாக்குமூலமளித்தனர். அதனைப்பற்றி நீதிபதி கீழக்கண்ட தீர்ப்பைக் கூறினார்:-

என முன்னிலையில் கூறப்பட்ட வாக்குமூலங்களைக் கவனிக்கும்பொழுது பிரஸ்தாப விபத்து தவிர்க்க முடியாததானும் அதற்காக இரு சாரதிகளை மீதும் குற்றங்கூற முடியாததானும் நான் அபிப்பிராயப்படுகிறேன். மரணத்தை விளைவிக்கும் பொறாமையைப் போன்ற அந்த வீதிகளின் சந்திப்பை விஸ்தரிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜனங்களுக்கு நான் எடுத்துரைப்பதாகும்.

புதுமந்திரி

மிஸ்டர் டங்கன் நாண்டிஸ் புதுமந்திரியாக நியமிக்கப்பட்டதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவிக்கின்றது. இவருக்கு வயது 36 தான். பிரிட்டிஷ் மந்திரிசபையிலுள்ளவர்களில் இவர்தான் மிகவும் இளையவர். விமானத் தாக்குதலால் கட்டிடச் சேதம் ஏற்பட்டிருக்கிறது சம்பந்தமான விலையைப் பார்த்துக் கொள்ளுவதற்கும் புதுமந்திரியமனம் ஆலோசனையாயிருப்பதற்கும் பிரதமமந்திரி சேர்ச்சில் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணவரு
கார்த்திகைமீ கஉஉ திங்கள்கிழமை

அரசாங்கசபைப் பிரதிநிதி பள்ளிக்கூட அதிபராய் இருக்கவொண்ணுதா?

சென்றவாரங்கூடிய இலங்கைஅரசாங்கசபைக் கூட்டத்தில் கல்வி நிர்வாகசபை யங்கத்தவரு ளொருவராகிய டக்ளர் A.P. டீ. சொயிஸா என்பவர் "கல்வி நிர்வாகசபையில் அங்கத்துவம் வகித்திருக்கு மொருவர் அரசினர் நன்கொடை பெறும் வித்தியாசாலையின் அதிபராகவேனும், இல்லையேல் அவ்வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகவேனும் இருக்கவொண்ணுது' என்னும் பிரேரணையை எடுத்தாண்டனர். அப்படி யிருக்கவொண்ணுதென்பதற்குப் பல காரணங்கள் சில அங்கத்தவர்களால் சபையில் எடுத்துக் காட்டப்பட்டன; ஒருவரே கல்விப்பகுதி நிர்வாகசபையில் அங்கத்தவராகவும் ஒரு வித்தியாசாலையின் அதிபராகவும், இல்லையேல் தலைமை ஆசிரியராகவுமிருந்தால் அவர் தம் வித்தியாசாலை விஷயமாகச் சில சில கருமங்களை, அங்கத்தவரென்ற முறையில் ஆற்றுதல் முடியும், அப்படித்தான் அவர் ஆற்றுவிட்டாலும் ஊரவர்கள் அவரை விபரீதமாக நினைக்கக்கூடும் என்ற நியாயம் எடுத்துக்காட்டப்பட்டது. இப்படி இருபகுதியிலும் கடமையாற்றுவதனால் குறித்த ஒருவர் கல்வி நிர்வாகசபையின் அங்கத்தவரென்ற முறையில் வித்தியாதிகாரி முதலானவர்க்கு மேலாக விருப்பாரென்றும், பள்ளிக்கூட அதிபரென்ற முறையில் வித்தியாதிகாரி முதலியோர்க்குக் கீழ்ப்பட்டவராவாரென்றும் நியாயங்கள் எடுத்துக் காட்டப்பட்டன,

குறித்த பிரேரணையை மிஸ்ரர், A R. A. ஹஸிக், திரு. G. G பொன்னம்பலம், மிஸ்ரர் சைமன் அபயவிக்கிரம, மிஸ்ரர் R. S. S. குணவர்த்தன, முதலிய சிலர் அநுசரித்துப் பேசினர், மிஸ்ரர். D S. சனநாயகா; திரு. A மகாதேவ, திரு. S. நடேசன், மிஸ்ரர் P. டீ S. குலரத்தின, மிஸ்ரர் T. B. ஜயா, மிஸ்ரர் A. ரத்தினநாயக, மிஸ்ரர் H. W. அமரசூரிய என்போர் இப்பிரேரணைக்கு மாறாக வாதித்தனர். வித்தியா பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் கன்னங்கரா வென்பவர் வித்தியாசாலை அதிபர்கள் கல்வி நிருவாகசபையில் இருப்பது நல்லதெனப் பேசினரேனும் ஒரு முக்கத்திற்குஞ் சம்மதங் கூறாது வாளாவிருந்தார்.

கருமம் இப்படியாக, நாட்டிலுள்ள பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் விஷயத்தில் ஈடுபட்டுழைக்கும் பள்ளிக்கூட அதிபர்களும், கல்வியறிவும் உபாத்திமைத் தொழிலிற் பழுத்த அநுபவமும் வாய்ந்த தலைமையாசிரியர்களும் கல்வி நிர்வாகசபையில் அங்கத்தவர்களாயிருக்கிறதனால் இவர்கள் கல்வி விருத்திக்கு அநுகூலரா யிருப்பார்களே யொழியப் பிரதிகூலராக விருக்கமாட்டார்களென்றே நாம் நினைக்கிறோம், வித்தியாசாலைகளின் அதிபர்களாய்க் கடமையார்ப்போருட் சிலரினுஞ் சிலர் கல்வியறிவிற் குறைந்தவராய், வியாபார நோக்கமாகக் குறித்த கடமையைப் பார்ப்பவர்களாய் இருத்தலுங் கூடும்; ஆனால் அப்படிப்பட்டவர்களைக் கல்வி நிர்வாகசபையில் அங்கத்தவராக்காது விடலாம். அதுவன்றி, கல்வியில் அபிமானமும் அநுபவமும் பூண்ட வித்தியாசாலை யதிபர்களைக் கல்வி நிர்வாகசபையில் இல்லையேல் அரசாங்கசபையில் அங்கத்தவராக வரவொட்டாது புறக்கணிப்பது புத்தியீனமாமென்றே பெண்ணவேண்டும்.

மேலும் இந்த வித்தை விஷயத்திலே மேல் கீழ் பார்த்தல் முடியாது; கல்வியறிவு அநுபவம் வயசு என்னுமிவைகளில் முதிர்ந்த தலைமையாசிரியரும் உதவியாசிரியர்களும், மேலே சொல்லப்பட்ட குணங்களுஞ் செயல்களும் முதிராதவர்களாகிய 'மனேஜர்' மார், வித்தியாகாரிசிகள் முதலான அதிகாரிகளின் கீழ்க் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் பலவுண்டு. ஒரு கலாசாலையிலுள்ள தலைமையாசிரியரிடத்திலும் ஏனைய ஆசிரியர்களிடத்திலும் படித்த ஒரு மாணவன், குறித்த கலாசாலையிற கல்விபயின்று பின் பத்துவருடங்கட்கிடையில் அந்தக் கலாசாலைக்கே தான் அதிபராகித் தனது பழைய தலைமையாசிரியரிடத்தும் ஏனைய ஆசிரியரிடத்தும் அதிகாரஞ் செலுத்துவதுஞ் சகசமல்லவா? பழைய "மனேஜ"ருடைய மகன், மகள ஆகிய இவர்களெல்லாரும் அதிபராகி அதிகாரஞ் செலுத்தக்கூடிய இந்தக் காலத்திலே கீழ் பார்க்கமுடியுமா? குறித்த வாலிபன் மனேஜராக வந்துவிட்டானென்ற காரணம்பற்றிப் பழைய தலைமையாசிரியர்களும் உதவியாசிரியர்களும் அந்தக் கலாசாலையிற கடமையாற்றாது அதனைவிட்டகல்வதா?

இதுமாத்திரமா, மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் மாறி நடைபெறுஞ் சந்தர்ப்பங்கள் வித்தியாசாலையில் இன்னுமொன்றுண்டல்லவா? இதையெழுதும் யாம் இங்குள்ள ஒரு கல்லூரியிற் பலவருடமாகத் தமிழ் உபாத்தியாயராக்க் கடமை பார்த்து வருகின்றமையினால், எம்மிடத்திலே கல்விபயின்ற மாணவருட் சிலர் இப்பொழுது வித்தியாதரிசிகளாக இங்கும் இலங்கையின் வேறு பாகங்களிலும் பரீட்சைகள் நடாத்தி வரலாயினர்; இவர்கள் வரும்பொழுது குறித்த கலாசாலையிலுள்ள தலைமையாசிரியர் முதலான எல்லா ஆசிரியர்களும் அவர்களை மரியாதையோடு வரவேற்றுத் தம் கடமையை அவர்கள் செய்தற்கு இயன்ற துணை புரிந்தே வருகிறார்கள்; வித்தியாதரிசிகளும் தம் கடமையைச் சரிவரச் செய்து வருகிறார்கள்; ஆனால் இவர்களுள் இளமையாடும் அதிகாரமயக்கததோடுங் கூடிய ஒரு வித்தியாதரிசி தாம் எம்மிடத்திற் பல வருடந் தமிழ்ப்படித்துளளனரோனும்; தீட்டுந் தடியிற் கூர் பார்ப்பார்போல், நாம் கல்விபயிற்றிக்கொண்டிருந்த வகுப்பிற் பிரவேசித்து, அங்கிருந்த மாணவர்களைப் பரீட்சிப்பதை விடுத்து எம்மையே பரீட்சிக்கவும், கல்வி பயிற்றும் முறையை எமக்கே தெருட்டவுந் தலைப்பட்டார்; அவ்வளவோடமையாது, தமது டரீட்னசப் பேற்று அறிக்கைப்பத்திரத்தில் எமக்குப் பிரதிகூலமாக ஒரு வசனத்தையும் பொறித்துவிட்டார்; இப்படி அவர் செய்தமையினாலே அவர் மேலென்றும் நாம் கீழென்றும் மதித்து எமது கடமையைச செய்யாமல் விடமுடியுமா? மௌட்டிகத்தோடு கூடிய அதிகாரமே கல்வியைத்தானும் அடக்கியாளும் இந்தக்காலத்திலே மேல் கீழ் பார்க்கமுடியுமா? எவரெவர் எந்த எந்தத் தானத்தில் நியமிக்கப்பட்டுள்ளனரோ, அவரவர் அந்த அந்தத் தானங்களிலிருந்து கொண்டு தம் கடமையைத் திறம்பாது மனப்பூர்வமாகச் செய்து கொண்டுவருவரேல் அவரே மேலானவரென மதிக்கப்படுவர்.

இந்த அரசாங்கசபை தொடங்கிய காலந்தொட்டு இற்றைவரையில் ஒருவரோ வித்தியாசாலை யதிபராகவும் அரசாங்கசபை யங்கத்தவராகவும் கடமைபார்த்து வருவதனாற் பிழைகள் நேரவில்லை யெனலாம்; வித்தை விஷயமாகவும் அரசியல் விஷயமாகவும் விரைவிலே பல திருத்தங்கள் நிகழ விருப்பதாகச் சொல்லப்படும்போது, இந்த ஒரு மாறுதலை இப்பொழுது செய்யவேண்டிய ஆவசியக மில்லையே. மேலும் ஊரவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அப்பிரதிநிதிகள் அப்படிச்செய்யவேண்டும் இப்படிச் செய்யவொண்ணுதெனப் புதிய பிரமாணங்களை விதித்தற்கு அதிகாரமுண்டோ என்பதும் ஆராய்தற்கிடமாம்.

நோக்கியோ மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சு

வாஷிங்டன் நவ 24—

இன்று பட்டப்பகலில் மரியான் தீவிலிருந்து கிளம்பிச் சென்ற அமெரிக்க விமானங்கள் டோக்கியோவில் குண்டு வீசிவிட்டு வருவதாக அமெரிக்க யுத்தக் காரியாலயம் அறிவிக்கிறது.

நம் தாக்குதலுக்கு இலக்கானவைகள் டோக்கியோ பகுதியிலுள்ள மின்சார உற்பத்திச்சாலை அணைக்கட்டுகள், யோக்கஹாமா பகுதியிலுள்ள கப்பல் துறைகள், கப்பல்களைப் பழுதுபார்க்கும் இடங்கள், விமான தளங்கள முதலியனவெனத தெரிகிறது.

இதுவரை ஜப்பானைத் தாக்கி வந்த நம் கடல் ஆகாயப் படைகளில் இன்று தாக்கிவந்தவையே மிக பலம் பொருந்தியவை எனநம்பப்படுகிறது. யோக்கஹாமா, கோப் முதலிய நகரங்களும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கலாம்.

இன்று டோக்கியோவைத் தாக்கிவந்த 20-வது அமெரிக்க விமானப்படையின் தலைவர் ஜெனறல் அர்னால்ட் இத்தாக்குதலைப்பற்றி குறிப்பிட்டதாவது:—

நம் தாக்குதலால ஜப்பானை கிடுகிடுத்துப் போயிருக்கும். நம் படைகள பெரும ஆட்சேதத்தையும் பொருட் சேதத்தையும் கருதாது மிகவும் சிரமதுடன பிடித்த பசிபிக் தீவுகளை எவ்வளவு சிறந்த வழியில உபயோகபடுத்த முடியுமோ அவ்வளவு சிறந்த வழியில் உபயோகப் படுத்துகின்றன என்பது இதனிருந்து தெரியவருகிறது. மரியானுவல் போரிட்டு மடிந்த அமெரிக்கரின் தியாகத்தால் ஆனது டோக்கியோவின் தொழிறசாலைகளை சேதப்படுத்த முடிந்தது. தங்கள் யுத்த தொழிறசாலைகளை எங்குகொண்டுபோய ஒளிக்க ஜப்பானியர் முயறசித்தாலும சரி, நாம அவைகளை அழிக்கவல்லோம் அவறறைத் தேடிச்சென்று அழிப்போம்.

இது டோக்கியோவின் மீது இரண்டாவது தாக்குதல். முதல் தாக்குதல் சென்ற 1942 ஏப்ரல் 18-ந் தேதி 'ஹார்னெட்' என்னும் அமரனக் தாககி கப்பலிலிருந்து ஜெனறல் டூலிட்டிலால் நடத்தப்பட்டது. இத்தாக்குதலைப்பற்றி ஒரு விரிவான அறிக்கை விடப்படுமெனத் தெரிகிறது

ஹாங்கௌ, ஆச்சாங் நகரங்களில் குண்டுவீச்சு

அமெரிக்க கனரக விமானங்கள் சென்ற பதன்கிழமை சீனத்திலுள்ள ஹாங்கௌ, ஆச்சாங் முதலிய துறைமுகங்கள உட்பட ஆறன் பிராந்தியதைக் கடுமையாகத் தாக்கியதாக ஜப்பானிய நியூஸ் ஏஜன்ஸி கூறுகிறது.

பாரதி விழா

பிழை திருத்தம்.

யாழ்ப்பாணப், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச்சங்கத்தாரால் கொண்டாடப்பட்ட பாரதிவிழா பற்றிச் சென்றஇதழில் வெளிவான கடிதத்தில் உள்ள தீர்மானம் கடிதம் எழுதியவரால் பிழையாக எழுதப்பட்டுவிட்டதாக அறிகின்றோம். அதை பின்வருமாறு சரியாகப் படித்துக் கொள்ளுங்கள்.

தீர்மானம்

"மகாகவி பாரதியாரின் ஞாபகச் சின்னமாகத் தமிழ் நூல் நிலையமொன்றை அவர் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் நிறுவுதற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியர்களைக் கண்டு பிரிட்டன் பயப்படுகிறதாம்!

வாஷிங்டன், நவ 25

இன்றிரவு அமெரிக்க றேடியோவில் இந்தியர் சம்பந்தமாக ஒரு விவாதம் நடந்தது.

வாஷிங்டனிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர்காரியாலயத்தின் ஆலோசகரான ஸர். பிறெடெறிக் பக்ஸ், பொருளாதார நிபுணரும், இந்திய வியாபாரியுர், இந்திய ஒறிபன்ற பிறஸின் அமெரிக்க நிருபருமான ஜனுப். எஸ். ஏ. அஹமத ஐக்கிய அமெரிக்க அபேதவாதக் கட்சித் தலைவர் மிஸ்டர். நார்மன தமஸ், கியூபாக் தொகுதியைச் சேர்ந்த காங்கரஸ் பிரதிநிதி மிஸ்டர் இம மானுவல் செல்லர் ஆகியோர் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர்.

இந்தியா சுதந்திர மடைவதற்கு எது தடையாயிருக்கிறது என்ற விஷயம்பற்றி இவ்விவாதம் நடந்தது. ஜனுப் அஹமத கூறியதாவது:

ஹிந்து காங்கிரஸ்கட்சி முஸ்லீம்களிடத்திலும் இதரசிறுபான்மைப் பகுதிகளிடத்திலும் சந்தேக முடியாத அச்சத்தை காட்டுகிறவரை பல ஆதிபர் பிளவுபட்டிருக்கவும், அமைதி நிலையிலுமதான இருக்கும், இந்தியாவிலுள்ள தங்கள் செல்வங்களில் அதிகமாக எல்லாவற்றையும் பிரிட்டன் கவர்ந்துவிட்டது. இந்த யுத்தகாலத்தில் அது இந்தியாவுக்குக் கடனபட்டிருக்கிறது. ஆகையால தமதீபாதைய முட்டுக்கட்டைபினால அதற்கொன்றும் நஷ்டமில்லை.

பிரிட்டிஷ்காரர்களின உதவியுடன் ஹிந்துப் பிராமணர்களும் இதர உயர்குலத்தினரும் இந்தியா சுதந்திரமடைவதற்கு இடையூறாக இருக்கிறார்கள் என்று ஏன் துணிச்சலாகச் சொல்வேன்.

மிஸ்டர். நார்மன தமஸ் கூறியதாவது:—

சிங்கத்தின் வாலை இப்படியும் அப்படியுமாவிழுப்பது சுலபம்தான்; அதன மீசையைப்பிடித்து இழுப்பதும சுலபமாகத்தான் இருக்கும். ஆயினும், இந்தியாவை பிரிட்டன் அடிமையில வைத்திருப்பதானது இங்கிலாந்தின் முகத்திலுள்ள பெரிய களங்கம் தானே! இங்கிலாந்திற்குள ஆபேதவாதமுறைகள ஏராளமாக இருக்கின்றன. ஆனால் வெளியிலோ ஏகாதிபதியத்தைத்தான் அது கையாளுகிறது.

இந்தியா தனது நிர்வாகங்களைக் கவனித்துக் கொள்ளுவதற்குச் சாத்தியமான நிலைமை ஏற்பட்டவுடன் அதற்குச் சுயாட்சி தருவதாக, பிரிட்டன பூரணமாக வாக்களித்திருக்கிறது. ஆனால் முதலில் யுத்தத்தை வெனறாகவேண்டும்.

'கலை' பத்திரிகை மேற்கொண்டிருக்கும் அரியமுயற்சியை இச்சங்கம் பெரிதும் பாராட்டுகிறது.

குறித்த நூல்நிலையத்திற்காகச் சேர்க்கப்படும் நிதிக்குப் பெருந்தொகையாக நன்கொடை வழங்குமாறு தமிழ் அன்பர்களை—சிறப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் அன்பர்களை—இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது" கடிதம்.

பரிமேலழகர்

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் திரு. ராவ்ஸாஹெப். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்.
சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பியது

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தமிழ் மக்களுக்கு என்றும் பெருமையளித்து வரும் பெருநூல். இந்நூலைக் கற்றுணர்ந்த பிறநாட்டு அறிஞர்கள் பலர் இதன் அரிய கருத்துக்களைத் தங்கள் நாட்டினரும் கற்றுப் பயன்பெறவேண்டுமென்று விரும்பித் தங்கள் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இந்நூல் தோன்றிய காலந்தொட்டுச் சுமார் 1500 ஆண்டுகளாக, இதன் புகழ் எங்கும் கொண்டே வருகிறது; புகழ்களையெல்லாம் தொகுத்துத் திருவள்ளுவமாலையென்ற தனிநூலும் தோன்றியுள்ளது. இதன் நயங்களைக் குறித்து எழுதாத தமிழறிஞர்களில்லை. பேச்சு நிழாத பிரசங்கமேடையும் இல்லை. எனினும் இதன்பெருமை ஆராய்ந்து உள்ளபடி உணர்ந்தவர் மிகச்சிலரே. இவருள் தலைசிறந்தவர் பரிமேலழகர்.

வள்ளுவர் குறட்பாக்கள் சுருங்கிய சொற்களுடையன; எளிமையும் தெளிவும் உள்ளன. ஆனால் இக்கலைகளால் நாம், ஏமாந்து விடக்கூடாது. சில மந்திரங்களில் அடங்கிலதனை யெட்டித் தொட்டு விடலாமடி சீர்தெளிந்து நிறுத்தும் இதுகேர்தற்றனைத் நமபி ஓருவன் காலிவிடுவானானால், ஆழம் எப்படி வொண்ணாதாயிருக்கும். இதுபோலவே வள்ளுவரது தெளிந்த எளிய தொடர்களிலே கருத்துக்கள் மிக ஆழ்ந்தனவாயிருக்கும். அவற்றை அறிந்து கொள்ளுதல் எளிதன்று. கறக்க கறக்க ஆறாமல் ஆழம் புலப்பட்டுக்கொண்டேயிருக்கும்; அவற்றின் நயங்களும் மிகுந்து தோன்றிக்கொண்டேயிருக்கும்.

நவிலதொறும் நூல்நயம்
போலும் பயிலதொறும்
பண்புடையாளர் தொடர்பு

என்று வள்ளுவர் தாமே கூறியதற்கு அவருடைய பெருநூலே சிறந்த சான்று. பரிமேலழகர் இத்தன்மையை நன்கு அறிந்திருந்தனர். எளிமையும் தெளிவும் அவரை ஏமாற்றிவிடவில்லை. தமது பரந்த கல்வி முழுமையும் நுண்ணிய அறிவு முழுமையும் அரிய மொழி வன்மை முழுமையும் வள்ளுவரின் ஆழ்ந்தகன்ற கருத்துக்களை உணர்தற்குப் பயன்படுத்தினர்.

மதநுட்பம் நூல்வா யுடையார்க்கதிநுட்பம்
யாவுள முணர்வாரவை.

இயற்கையறிவும் கலைக்கேள்வியும் நிறைந்திருப்பவர்களுடைய ஆற்றலால உணர்ப்படாமல் முன்னறியது யாதேனும் உளதா? இல்லை. இங்ஙனம் உணர்ந்து தெளிந்து வள்ளுவரது கருத்துக்களைத் தமிழ்மக்களுக்கு ஓர் உரை வெழுதி அறிவுறுத்தினர் பரிமேலழகர். உரையின் பெருஞ்சிறப்பை புணர்ந்தே, ஒரு புலவர்,

பாலெல்லாம் நல்லாரின் பாலா
மேர பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய்
நூலல்லா — நூலிற்
பதித்தவுரை யெல்லாம் பரிமே
லழகன்
தொத்தவரை யாமோ தெளி
என்ற செய்யுளைப் பாடினர்.

இச்சிறந்த உரையை எழுதியதோடு பரிமேலழகரது செயல் அமைந்து விடவில்லை. வள்ளுவரது புகழை உண்மையாக வளர்த்த அருஞ்செயலும் இவர்பாலதாயிற்றே. இவர்க்கு முன்பு எத்தனையோ அறிஞர்கள் திருக்குறளுக்கு உரையெழுதி அந்நூலின் கருத்துக்களை விளக்க முயன்றனர். பரிமேலழகரை உள்ளிட்டுப் பத்து ஆசிரியர்களைக் கூறுவர்.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேலழர் பருதி—
திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர்
வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்கார் இவர்

இப்பத்து ஆசிரியர்களிலும் கடைசியில் தோன்றியவர் பரிமேலழகரென்றும் ஆவருக்கு முன்புள்ளவர்கள் எழுதிய உரைகள் ஒன்பதும் இருந்தும் இவர்தாமே பரிமேலழகரானென்றும் ஒரு பழஞ்செய்யுள் கூறுகிறது.

திறந்தெரிந் துரைத்த செவ்வி
முப்பாலுக்கு
ஒருநூறாயின ஒன்பது
செறிந்தும்
ஐயுறவாக நையுற நாலை
என்பது அச்செய்யுட் பகுதி.

இவ்வொன்பது உரைகளுள் மணக்குடவர் உரையொன்றே அச்சில் வந்துளது. காலிங்கர் உரையும் பரிபெருமாள் உரையும் ஏட்டுப் பிரதியில் உள்ளன. இவைகளை நோக்கிய அளவில், இவை உரை நயமற்றன, என்பதை மறுப்பதற்கு நியாயம் சிறிதும் இருப்பதாகத் தோன்றவில்லை. பரிமேலழகரொருவரது உரையொன்றே வள்ளுவரநூலின் பெருமைக்குத் தக்கபடி அமைந்து அதன் புகழை வளர்க்க வல்லதாயுள்ளது.

இங்ஙனமாகத் திருக்குறளின் பெருமையை ஆராய்ந்து தெரிந்து அதன் கருத்துக்களை நுட்பமாக உணர்ந்து அதற்கு அரிய உரையியற்றி அதன் புகழை வழுத்தவர் பரிமேலழகர் ஆவர். இவருடைய வரலாறு யாது?

இவரை ஒரு பழஞ்செய்யுள், 'கருதுதான் வகுத்தமைதான் கலைதேர்ச்சை காவலனே' (பெருந். 1547) என்ற குறிப்பிடுகிறது. எனவே, ஒக்கூர் என்ற ஊரில் இவர் வாழ்ந்தவரென்று விளங்குகிறது. இந்த ஒக்கூர் பாண்டிநாட்டைச் சார்ந்ததென்பது, 'போறகு தமிழ்க் கூடற பரிமேலழகியனென்பான்' (பெருந். (1548) என்ற மிலொரு பழஞ்செய்யுளால் புலனாகிறது. இவ்விரண்டு செய்யுட்களின் ஆதாரமுங்கொண்டு இவர் ஒக்கூரிற் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று எண்ண இடமுளது. இக்கருத்து ஒருபுறமிருக்க இவரைக் காஞ்சியில் வாழ்ந்தவரெனக் 'திண்ணை மணலைச் சதகச்' செய்யுளொன்று கூறுகிறது. 'திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் வள்ளுவர்நூற்கு வழிகாட்டினனெண்ணை மணலைப்' என்பது அச்செய்யுட்பகுதி. கர்ணபரம்பரையும் இக்கருத்தையே ஆதரிக்கிறது போலும். உண்மை தெளிய முடியவில்லை. 'திண்ணை மணலைச்சதகச்' செய்யுள் ஆதாரம் பற்றித் தோன்றியிருத்தல் கூடும். சோழநாட்டிலான சமயகுரவரைப் பற்றி 'உச்சிதக்கற்' கூறப்பட்டுள்ளதனை சோகதமி—ந்து, இதில் வரும் சரித்திரச் செய்திகள் அனைத்தும் உண்மையெனக் கொள்ளுதற்கு கலல. கர்ண பரம்பரை சதகச் செய்யுளை அடிப்படையாகக் கொண்ட பிற்காலத்தார் கற்பித்துக் கொண்டதாயும் இருக்கலாம். ஆதலால் வேறு [illegible] கும்வரை பரிமேலழகர் பாண்டிநாட்டு ஒக்கூரினர் என்ற கொள்ளுதலே தக்கது.

பரிமேலழகர் என்ற பெயரினின்று இவரை வைஷ்ணவரென எளிதில் தெரிந்து கொள்ளலாம். இதற்கேற்பத் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்' (இறைமாட்சி - அவதாரிகை) எனவும், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' குறள்' (குறள் - 349 உரை உரை) எனவும்,

நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாநீர்த்
தொன்றாய்க் கிடந்த வருள்பெரு
ம்பா ழுலப்பி லதனை
யுணர்ந்துணர்ந்து
சென்றுங் கின்பத் துன்பங்கள்
செறறுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு அது
வே வீடு வீடாமே
(குறள் - 370 உரை)

எனவும் திருவாய்மொழியை மேற்கோள் காட்டியுளளார்.

இவர் பெயர் 'பரிமேலழகையன்' எனப் பிரதிகளிற் காணப்படுகின்றது. இதனால் இவர் அந்தணரா வர் என்று கொள்ளலாம். தமது உரையில் இவர் காட்டும் வடமொழிவன்மை இதற்குச் சான்றாகும்.

இவரது காலம் யாது? காமத்துப்பாலின் அவதாரிகையில் 'வடநூலுட் போசராசனும் சுவை பலவென்று கூறுவார் கூறுக. நாம் கூறுவது இன்பச்சுவை யொன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான்' என்று காணப்படுகிறது. இங்குக் குறித்த வடநூல் போஜராஜன் இயற்றிய சிருங்காரப் பிரகாசமாகும். இவன் காலம் 11ம் நூற்றாண்டின் முற்பகுதி. இவன்காலத்திற்குப் பிறப்பட்டவர் பரிமேலழகர் என்பது உறுதி. வேறொரு குறிப்பினால் நன்னூலை இயற்றிய பவணந்தியுக்குப் பிற்பட்டவரென்பதும் விளங்குகிறது. ஒருபொருட் பன்மொழி என்பது தமிழிலக்கண நூலாருடைய குறியீட்டுத் தொடர். மிமிசை என்பது இதற்கு உதாரணம். இக்குறியீடு தொல்காப்பியத்தில் இல்லை. இப்பேரிலக்கணம் 'ஒருபொருளிருசொற் பிரிவில வரையார்' (சூத்திரம் 439) என்று கூறும். நச்சினார்க்கினியர் முதலியோர் 'மீமிசை' போன்றதனை 'ஒருபொருளிருசொற் பிரிவிலாதது' என நீண்டதோர் குறியீட்டினால் வழங்கினர். முதனூலில் 'ஒருபொருட் பன்மொழி' என்ற சுருங்கிய அழகிய தொடரை வழங்கியவர் பவணந்தியடிகளாவர். முறைப்படி வேறு இலக்கண நூல்களிலேனும் இக்குறியீடு காணப்படவில்லை. பரிமேலழகர் இதனை இரண்டு இடங்களில் (571, 863 உரை) எடுத்தாண்டுள்ளார். ஆதலால் இவர் நன்னூலாசிரியர்க்கும் பிற்பட்டவராவர். நன்னூலாசிரியர் காலம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே பரிமேலழகர் 13-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரல்லர் என்பது தெளிவு. இவரை 14-ம் நூற்றாண்டினரென்று கொள்ளுதலாயின் அது மிகப் பொருத்தமென்றே தோன்றுகிறது. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசபுரிந்த விஜயகண்ட கோபாலனது 21-ம் ஆட்சியாண்டில் (கி. 1277-ம்) காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிற் சாஸனமொன்றில் 'வண்டுவரைப் பெருமாளான பரிமேலழகிய பெருமாளதாக.' என்றொருவர் குறிக்கப்படுகிறார். இவர் உரைகாரராகிய பரிமேலழகரேயென்று சொல்லுதற்குச் சான்று யாதும் இல்லை. ஓர் ஆராய்ச்சியாளர் 'சேனாவரையர் பிறந்த 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாவது வாழ்ந்தவரென்றும் இவர்க்குந் [illegible]

திருமணம்

கணபதிப்பிள்ளை—
உபயலட்சுமிதேவி

கொழும்பு, வித்தியா பகுதிப் பாட நூன்மொழி பெயர்ப்பாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் தென்புலோலியூர், திரு. வை. தம்பு அவர்களின் புதல்வி திருவளர் செல்வி, உபயலட்சுமி தேவிக்கும் நிகழும் தாரண வருஷம் ஐப்பசி மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை இரவு நிகழ்ந்த சுப முகூர்த்தத்தில், அவ்வூர் விக்னேஸ்வர தேவாலயத்தே, தமிழ்முறைப்படி திருமணம் நிகழ்ந்தது. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பிரபலஸ்தர்களும், பத்திராதிபர்களும் எழுத்தாளர்களும், நண்பர் உறவினரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். மணமகன் இலத்திலும் மணமகள் இல்லத்திலும் கொண்டாட்டம் நிகழ்ந்தது.

தடங்கருணைப் பெருங்கடவுள் தம்பதிகளை ஆசீர்வதிப்பாராக.

ஜெர்மனியின் மற்றொரு இரகசிய ஆயுதம்

லண்டன் நவ 22—

புதிய புதிய ஆயுதங்களை உற்பத்திசெய்ய ஜெர்மனிக்கு அளவற்ற சக்தி இருப்பதாகத் தெரிகிறது. கிளைடர் ரெயட்டுகளை அதாவது ஆளில்லாமலே செலுத்தக் கூடிய கிளைடர் விமானங்களை உற்பத்திசெய்ய ஜெர்மன் விஞ்ஞானிகள் வேலைசெய்து வருகிறார்களாம்.

ஸ்டாக்ஹோலிருந்து வரும் ஒரு செய்தி பின்வருமாறு கூறுகிறது:- பிரிட்டனுக்குக் குண்டுகளை ஏற்றிச் செல்ல ஆளில்லாமலே செல்லக் கூடிய கிளைடர் விமானங்களை ஜெர்மானியர் சீக்கிரத்தில் உபயோகிக்கக்கூடுமென்று இங்குள்ள எதிரி ஏஜண்டுகள் கூறுகின்றன. பெரிய பெரிய விமானங்களில் இந்த கிளைடர்கள் ஏறிப்பறந்து கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து கீழே விடப்படுமாம்.

துக்களைப் பரிமேலழகர் பின்பற்றியுளரென்றும் எழுதியுள்ளார் (சாஸனத் தமிழ்க்கவிசரிதம் பக். 113-118) இதுவும் மேற்கூறிய உரைகாரர் 14-ம் நூற்றாண்டினரென்பதை வலியுறுத்துகிறது.

இவர் தமிழுக்குச் செய்துள்ள பெருந்தொண்டு யாது? திருக்குறளுக்கு இவர் ஒரு சிறந்த உரையெழுதினர். இதுவுமன்றி எட்டுத்தொகையுள் பரிபாடலுக்கும் இவர் உரையெழுதினரெனக் கொள்ளலாம். ஓருநூலின் சிறப்புப் பாயிரத்தால் இதனை நன்கு விளங்கும். ஒரு சிலர் இரண்டு நூல்களுக்கும் உரையிட்டவர் வேறுவேறாயிருத்தல் கூடுமோ என்று ஐயுறுவர். சுமார் 300 ஆண்டுகட்கு முன்பிருந்த திருமணி இரத்தினப்பிராயர் சிருக்குறளுக்குப் பரிமேலழகர் செய்த உரையிற் சில கருத்துக்களை விளக்க 'நுண்பொருளாலே' என்ற ஒரு சிறுநூல் இயற்றியுள்ளார். இவரமைத்த, 'பரிபாடலுரை' 'மழையிருஞ்சூழ்' எனத்தொடங்கும் முதலிரண்டு கலிகளுக்கு இரண்டாம் வேற்றுமைத் தொகையாகிய 'ஆழ்கடலையுடுத்த இவ்வுரையாசிரியர்' (குறள் (216) எனக் கூறுதலால் இரண்டு நூல்களின் உரையாசிரியரும் ஒருவரேயெனவும் இரத்தின பிராயர் கொண்டார். பரிபாடலுரை பரிமேலழகரது வடமொழியுணர்ச்சியின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

(வரும்)

செந்தமிழ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27/11/44

சுவேதாசுவதரோபநிடதம்

(ரீரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

ஞான்காபத்தியாயம்

(முற்றொடர்)

(சசு) க்ருதாத்பரம் மண்டபி வாதிஸூக்ஷ்மம் ஜ்ஞாத்வாஶிவம் ஸர்வபூதேஷு கூடம், விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஜ்ஞாத்வாதேவம் முச்யதே ஸர்வபாஶை:- இ—ள் க்ருதாத்பரம் மண்டம் இவ-நெய்யின் மேலுள்ள தெளிவு போல, அதிஸூக்ஷ்மம்-அதி சூக்குமமாய், ஸர்வபூதேஷு கூடம்- (சித்தும் சடமுமாகிய) எப்பொருட்களிலும் மறைந்திருக்கின்ற, ஶிவம் ஜ்ஞாத்வா-சிவபெருமானை யறிந்து (சிவதரிசனம்) விஶ்வஸ்ய ஏகம் பரிவேஷ்டிதாரம்-எப்பொருட்களிலும் ஒருவராய்ச் சூழ்ந்திருக்கின்ற, தேவம் ஜ்ஞாத்வா-தேவனையறிந்து, ஸர்வபாஶை: முச்யதே-எல்லாப் பாசங்களிலிருந்து விடுபடுகின்றான்.

குறிப்பு (ச) இம்மந்தரத்தால் "சிவபெருமானையறிந்து" 'சிவனையறிந்து' என்றிரண்டு வினைச்சொற்கள் 'விடுபடுகின்றான்' என்ற ஒருவினை கொண்டு முடிந்தன. அவற்றுள் முன்னையது தசகாரியத்துள் சிவதரிசனத்தையும், பின்னையது அதற்கு ஏதுவாய் முன்னதும் சிவரூபத்தையும் குறித்தன.

குறிப்பு (உ) "சதசும் சடமுமாகிய எப்பொருட்களிலும் மறைந்திருக்கின்ற சிவபெருமானை யறிந்து" மறைந்திருத்தல் - பாசஞான பசுஞானங்களாலறியமுடியாதிருத்தல். (இது முன்னுள காட்டப்பட்டது) பாசஞானமாவது சொல்லும் பொருளுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய நிகழும் ஞானம். பசுஞானமாவது பாசக்கூட்டங்களின்றி நீங்கித "தாம பிரமங்கடவர் பேறறமமைக கண்டாங்கதுவே நான் ப்ரமம்" என்று செருக்கறுமிடத்து ஞானம். இது கட்டறிவு எனவும படும். எட்டறிவிலறியப்படுவது அவ்வறிவிற்கு வேறுள்ள ஏகசித்தசப் பொருளே யாதலின் அவ்வியல்பு கடந்தவன் கட்டறிவிற்கு எட்டமாதலில்லை. இவ்வுண்மையினாலேயே 'அகோசரம்' என்று உபநிடதங்கள் கூறின. பாசஞானத்திற்கு எட்டாதவன் என்பதை 'அநருசதன்' எனனுஞ் சொல்லால் விளக்கின. அநருசதன்-சொற்பொருளுக்கு எட்டாதவன். அநுமானம் இவ்விருவகை ஞானங்களினாலும் அறியமுடியாத முதல்வன் அருள்ஞான மொன்றாலே தவறேதொன்றுமிலாது கண்டுணரவேண்டுமென்பாராய 'மறைந்திருக்கின்ற சிவபெருமானையறிந்து' என்று விதந்தெடுத்துக் கூறினார். ஒருவற்கு நன்றுணர்தலாவது, முதல்வன், பெத்தத்தில் உயிருக்கு அதரிசனமாய் நின்று கண்டு காட்டியுபகரிப்பவனாயினும், முதல்வனென்றொரு பொருளில்லையெனனுமபடி உயிரினுள் மறைந்திருந்தாற்போலக், கருவி காரணங்களினீங்கிய உயர்தனசெயல யாண்டுந் தோன்றாவண்ணம் அருளிலழுந்தி வேறற நின்றுணர்தல் அவனே தானேயாகிய வந்நேறி வசனுக்கியிறைடணி நிற்க, மலமாய தன மனனும் வலவன்னையினறே' என்றது சிவஞானபோதம். 'அசனமாந்தவன பனராயறுபலக செற்றமடலனுமடங்கி ஞானப், புகலுடையோர தமமுளளப் புணடரிததுளளருக்கும் புராணர்கேயில, ஏகுவுடைநாண்தலத்துச் சங்குவாகக் தழுச சலசததியுள், மகவுடைய புனமுமலாப் பொகட்டமணஞ செயயுமபூவையமே'

ஞ-சே-ராம்.

'டள்ளுவரைவர்கள் வர்புனத்திடை மறந்து நின்ற தள்ளுவர் சூறை கொள்வர்தூநெறி விளைய வெட்டார், முள்ளுடையிவர் கடம்மை முக்கணுன் பாதமேழ லுள்ளிடை மறைந்து நின்ற உணர்விறு லெய்யலாமே" நா-தேவாரம்.

உயிர் சுட்டறிவு நிகழ்தற்பொருட்டுத் தன்னாற் சாரப்பட்ட கருவி காரணங்களை உண்மையில் விட்டு நீங்குமாயில் அருளிலமிழ்ந்து மீமயன்றித தனித்து நிற்றல் எஞ்ஞான்றுமில்லை. நிற்குமாயின் கேவலத்தில் அல்லது மீண்டும் சகலத்தில் விழும் கருவிகளைப் பொருந்தக் கொண்டு நீங்கவிட்டதாக எணணுதல் பெருமயக்கின பயனேயன்றிப் பிறிதல்லை. இவ்வுண்மை விளங்கவே, "ஞானப்புகலுடையோர்" என்றும், 'முக்கணுன்பாத நீழலுள்ளிடை மறைந்து நின்று' எனறும் திருவாக்குகள் எழுந்தன.

இவ்வாறாருல் இஃது சிவதரிசனத்தைக் குறிக்குமென்று முன்பு கூறினோம், (உண்மைநெறிவிளக்கம் சூ வது செய்யுள பார்க்க) சிவதரிசனத்தோடுனிகழ்வது ஆன்மசத்தி. ஆன்மசத்தியாவது பாசக் கூட்டங்களை விட்டு நீங்கிய ஆன்மா தன் செயலொழிந்து போக அருளிலழுந்தி வேறற நின்று அதுவேதானாய் நிற்றல்.

குறிப்பு-ங "எப்பொருட்களிலும் ஒருவராய்ச் சூழ்ந்துநிற்கின்ற தேவனையறிந்து" கருவி காரணங்களைச் சாராது அவற்றினியல்பே தன்னியல்பாய்க் கொண்டுநின்ற உயிர் அது கருவிகளினியல்பன்றித் தன்னியல்பன்றென்றும், தன்னியல்பு அதனினும் வேறென்றும் அறிந்து அக்கருவிகளைவிட்டு நீங்கித் தன உணமையியலபினை உள்ளவாறுணர்ந்தால், தன்னிடத்திலே முதலவன் விளங்கித் தோன்றக் காணலாகும். அங்ஙனம் தன்னிடத்தே விளங்கித் தோன்றும் முதலவனை தன்னாற் சாரப்பட்ட கருவிகளிலும் அறறாருலறியும் புறப்பொருட்களிலும் நிறைந்து நின்று தனக்கு ஏனைப்பயன்களை யூட்டி யொழித்து உபகரிப்பவன் என்றறிதல் வேண்டும் என்று உணர்த்தவே 'எப்பொருட்களிலும் ஒருவராய்ச் சூழ்ந்துநிற்கின்ற தேவனையறிந்து' என்று விதந்துகூறினர். இஃது சிவரூபத்தைக் குறிக்குமென்று முன் கூறினோம். சிவரூபத்தினியல்பு:-

"தவ்வடிவுகளுந் தானு மெழிற்பரை வடிவதாகிக, சுவ்வியமாத தானமாவைக கருதியே பொதுகையாகப், பவ்வம விடடகளட் பணிப டாரியபா னொருவனென்று மெய்வவையே யுயிரிற காணடல சிவரூபமாகுமன்றே' என்னும் உண்மைநெறி விளக்கச் செய்யுளாலறிக.

சிவரூபத்தோடுனிகழ்வது ஆன்மதரிசனமாம். ஆன்மதரிசனமாவது தான சார்ந்துநின்ற கருவி காரணங்களை தானல்லவென்றும் தன்னுடையனவல்லவென்றும் அருளாலறிந்த ஆன்மாதான சுதந்திரனல்லவென்றும் தனக்கறிந்து நிற்பது திருவருளேயென்று முணர்ந்து அவ்வருளோடு கூடி நிற்றல். இதுவே தத்துவசுத்தியும் நிகழுமாறு கண்டுகொள்க.

பொ-ரை- நெய்யின்மேலுள்ள தெளிவுபோல அதிசூக்குமமாய், சித்தும் சடமுமாகிய எப்பொருட்களிலும் மறைந்திருப்பவரும், உலகனைத்தோடுமாகிச் சூழ்ந்திருப்பவருமாகிய சுவபெருமானை யறிந்து எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகின்றான்.

இரவு ஒன்பது மணிக்குள் போசனஞ் செய்ய வேண்டுமென்பதற்கு நியாயமும் பிறவும்

பிரமஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

முன்னிரவில் முற்பாதிக்குப் பிரதோஷமென்று பெயர், காலஞ் சாமத்தின் பிற்பாதிக்குபிரதத்தியூஷி [விடியற்காலம்] என்று பெயர், ஆக ஒரு சாமம்பொறுல் இடையே மூன்று சாமங்களுண்டு. இந்தக் காலத்திற்குத்தான் இரவு என்று பெயர் இதைப பேரிரவென்றுஞ சொல்லுவார்கள். முதசாமத்தின் முற்பகுதியாகிய பிரதோஷ காலம் நீங்க மிகுதியாக நின்ற அரைச சாமமே முன்னிரவு எனறு சாஸதிரங்கள் கூறும். இந்த முன்னிரவாகிய அரைச் சாமததிகுளளாகவே இரவில் செயயுய கருமங்களைச் செய்ய வேணடும். எறறுசகோ வெனறால் அத்தருணம் சூரிய கிரணத்துடன் பொருநதி யிருத்தலால எனக. சூரிய வெப்பம் உளள பொழுதான சில கருமங்களையுஞ் செயய வேணடு மெனபது தாமகாளலை. அச்சமயத்திற்குப் போசனஞ் செயய வேணடும். சூரிய உஷண சமபநதமில்லாவிடடால உணட பதார்தங்களைச் சீரணப்படுததுஞ் சகதி சாடாகக்கு உணடாகா. சூரியன் அஸதமித்த பின ஓரை சாமம் வரையும் சூரிய கிரணங்களா லுணடான உஷ்ணம் நிலவுவதால் கிற்கும். அதற்குமேல் வர வரச் சூரியனது உஷ்ண சகதி குறைவுபடச் சநதிர கிரணத்துக்கு ஆதிக்க முணடாகும் அத்தருணம் குளிர்ச்சி அதிகரிக்கும். அது மசலகருவி காரணங்களும புலனகளும ததமதொழில் களைச் செயயச சகதிகுனறும். முன்னிரவின முற்பகுதியாகிய பிரதோஷகாலததில சூரிய வெப்பம் அதிகமிருப்பதால அப்பேதே அனுஷ்டான முதலிய நியமங்களைச் செய்தல் வேணடும். பின்னரப்பய குறையத தொடங்கும். அதனால உட்கருவினை வலி செயயா. பசறாலததில் சாரத்தி லேறியுள்ள வெபபமும், ஆகனி காரியங்களா லுண்டாகின்ற வெபபமும் சேர்ந்திருக்கும் சமயத்திற்றான் போசனஞ் செய்ய வேணடும்.

சூரியன் அஸ்தமித்து மூன்றே முக்கால் நாழிகைக்குமேல் [ஏழரை மணிக்குமேல்] ஏழரை நாழிகைக்குள் [ஒன்பது மணிக்குள்] போசனஞ் செய்ய வேண்டும்.

வானப்பிரஸ்தன், சந்நியாசி, அமங்கிலி, பிரமசாரி இவர்களுக்குச் சுக்கில விருத்தி குறைய வேண்டுதலால் அவர்களுக்கு இரவில் போசனமில்லை. சுக்கில விருத்தியை அவசியம் வேண்டியவர்களான இல்லாச்சிரமர்க்கே இராப் போசனம் நியமிக்கப்பட்டது.

இல்லாச்சிரமிகளும் லேசான போசனத்தை மிதமாய்ப் போசனஞ் செய்ய வேண்டும். நோயாளிகள் ஐந்து நாழிகைக் [எட்டு மணி] குள் போசனஞ் செய்ய வேண்டும்.

வீட்டிலுள்ளாரனைவரும் முதற சாமத்தினுளளே போசனஞ் செய்ய வேண்டி யிருத்தலால், வீட்டுடையவன் விரைவாகப் போசனஞ் செய்ய வேண்டும்.

இரண்டு வேளை போசனமே நனமை, தப்பி மூன்று நேரம் போசனஞ் செய்யின சூரியன் இளம் பருவமா யிருக்கும் உதய காலத்தல மூன்றே முக்கால் நாழிகைக் குளளும் காளைப்பருவமாகிய உச்சிக் காலத்தல் 12 மணிக்குள்ளும் இராப்போசனம் ஏழரை நாழிகைக் குளளும் போசனஞ் செய்ய வேண்டுமாம். இது பற்றியன்றோ "ஒரு பேதுபோகி இருபோது போகி மும்போது நோகி" யெனறார். "உண்டதிரு பொழுதொழிய முப்பொழு துண்ணாமை" எனபவற்றையும நோக்கத் தக்கது.

நிலாவரை நீர்ப்பாய்ச்சல்

இந்துசாதனப் பத்திராதிபர் மூலம் வலி-கிழக்கு கமதொழிற் சங்க காரியதரிசி அவர்கட்கு:—

ஐயா!

நிலாவரையில் இருந்து நீர்ப்பாய்ச்சுவதுபற்றி பல கூட்டங்கள் நடாத்திவிட்டீர்கள். அடுத்து அடுத்து தீர்மானங்கள் அனுப்பிவிட்டீர்கள். பத்திரிகையில் ஆசிரியர்தரும் நல்ல நல்ல கட்டுரை எழுதியிருந்தீர்கள். பலன் ஏதாகுமல் இருக்கிறது? அரசாங்கம் இது விஷயத்தை கவனிக்குமென்று எதிர்பார்ப்பது தவறு. நிலாவரைக்குப் பக்கத்திலே கமதொழில் மந்திரியாருக்கு பாதலிட்டோம், மனுவிட்டோம், முகத்துக்கு தலையசைத்தார். ஆனால் பிறவுப்பலம் தாண்டியதும் மறந்துவிட்டார். சமீபத்தில C. D. C. வந்தார், கண்குளிர்ச்சியாகப் பார்த்தார். பலன் என்ன? கிளிநொச்சி பலன்தான் பேசிருக்கிறது. ஐயா! புத்தூர் நிலாவரை நீர்ப்பாய்ச்சல் வசதி வருமென்று நாம் மனக்கோட்டை கட்டலாமா? 4000 ஏக்கர் நிலத்தைக்கு! வருடத்தில் இரைப்புக்கூலி ஏழரை ரூபா பிடிக்கும் என்றுகூறி எவருக்கு ஆசைகளை களைவிட்டுவிடலாம். இப்படியாக எவருக்கு புதுப்புது ஆசைகளைக் களைவிட்டு எவர்களை ஏமாற்றப்போகிறீர்கள்.

இங்ஙனம்
த. வேலுப்பிள்ளை
ஓர் கமக்காரன்

19—11—44
வலி-கிழக்கு (உத)

சேர். இராமநாதன் திருநாள்

நிகழும் கார்த்திகைமாசம் 6உ (21-11-44) செவ்வாய்க்கிழமை பன்று கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஞாபகார்த்த தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கூட்டத்திற்குச் சபையின் உப அக்கிராசனராகும் அத்துவக்காத் திரு. நடராசா அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் தமது முன்னுரையில் சேர். இராமநாதனவர்களது தைரியத்தையும்கருணையையும் குறிப்பிட்டார்.

பின சேர். ஏ. சி. ஜி. விஜயக்கோனவர்கள் தமது சொற்பொழிவில் சேர். இராமநாதனவர்கள் கல்வி, சமூக முன்னேற்றம், அரசியல் முதலிய சகலதுறைகளிலும் பெயர் பெற்று விளங்கியமையையும், தம் நலன கருதாது சல சமூகத்தினரின சேஷத்திற்காகவும் அரிய உதவிகள் புரிந்தமையையும் தேச சேவைக்காகப் பல தியாகங்கள செய்தமையையும் குறிப்பிட்டார். பின்னர்ப் பேசிய திரு. டி. பி. ஜயா அவர்கள் சேர். இராமநாதனவர்கள் அரசாங்க உத்தியோகத்தராகவும் பழைய சட்டசபையின அங்கத்தினராகவும் அரும்பெரும் சேவைகளைப் புரிந்திருக்கிறாரெனவும் அவருடைய சொற்பொழிவுகள ஆழ்ந்த கருத்தமைந்தவைகளாகவும்உணர்ச்சியூட்டுபவைகளாகவும் இருந்தன எனவும கூறினார். கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுள் எவர் பதர்?

வி. சே. பி. என்.

உலகில் மக்கள் வாழ்வதற்கு முதற்காரணம் உணவு. உணவு காலதேசத்திற்குத் தக்கபடி வேறுபாடடைகின்றது. நம் தமிழ்நாட்டில் நெல்லினையே இன்றியமையாத உணவாகக்கொண்டு மக்கள் வாழ்கின்றனர். இவ்வழக்கம் இன்று நேற்றுத் தொடங்கியதல்ல, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே நெல்லை முக்கிய உணவாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. நெல் என்பது என்ன? நெல் என்பது அரிசி என்பதை உள்ளீடாகக் கொண்டு விளங்கினால் அதை நெல் என்பர். அரிசியில்லாது அரிசியுடையதுபோல விளங்கினால் அதனைப் பதர்என்பர். இலக்கணமுடையதுபோல விளங்கி இலக்கணமின்றியிருப்பதை இலக்கணப் போலியென்பர். சுத்தக் கதர்போல இருப்பதைப் "போலிக்கதர்" என்பர். வைரம்போல இருப்பதைப் 'போலி வைரம்' என்பர். இவைபோலவே பதரின் பொருளும்.

அரிசியுடன் கூடிய நெல் பயன்படுவதுபோலப் பதர்பயன்படாமையின் பயனிலாத பொருட்களுடன் சேர்க்கப்பட்டது. இந்நுண்பொருளைக் கண்ட கவிவாணர் விடுவரோ? அவர் தம் இலக்கிய உலகிலும் இப்பொருளைக்கையாளலாயினர். ஏன்? தாமினபுறவ தலகின்புறக் காணும் தன்மையாளரன்றோ?

உலகில் சில வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினோர் பெறுதற்கரியமானிடப் பிறவியைப் பெற்ற பொழுதே அறஞ் செய்து உயர்வு பெறுதற்கு ஆவன செய்யவேண்டுமல்லவா? இதைவிட்டுக் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக எண்ணி வாழ்நாளை வீணாளாகக் கழித்துப் பொன்னிலும் சிறந்த பொருளாங் காலத்தைப் பயனினறிச் செலுத்தப் பயனிலாச்சொற்களைக் கூறியும் கேளிக்கைகளில் கலந்தும் வாழ்வைக் கெடுக்கின்றனர்.

பதர் எவ்வாறு பயனற்றதாகக் கருதப்படுகின்றதோ அதுபோல மக்களுள்ளும் பயனில்லாதவரைப் பதராக எண்ணுகின்றனர். மக்களுள் எவர் பதர்? இவ்வினாவிற்கு விடை மிகவும் எழுகாகவும் சுருக்கமாகவும் அதிவீராமபாண்டியனார் இயற்றிய நறுந்தொகை கூறுகின்றது.

தமிழ்நாடு ஆயிரம் காவதம் பரவியிருந்த முற்காலத்தில அந்தணர் எனப்படுவோராகிய அறவோர் எல்லா உயிர்களிடத்தும் தண்ணளியையுடையவராய் நாடுதோறும் வண்டி இறைவனை முழுமனதுடன வழிபடுதினர். அரசனுக்கு அறிவு வேண்டுழி அறிவு உதவியும், இருநாட்டு மன்னர்க்கு சமாதானஞ் செய்யும் பொருட்டு முனைந்தும், நாட்டிற்கு இன்றியமையாத மக்களாக வாழ்ந்து வந்தனர். அந்தணர்க்கு இன்றியமையாத தொழில் வேதங்களை இடைவிடாது ஓதலும் ஓதுவித்தலுமேயாகும். வேதங்கள் நான்கு வகைப்படும், அவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் முதலியனவாகும். இந்நான்கு வேதங்களையும் மறவாமல் ஓதுதல் அந்தணர்க்கு இன்றியமையாத கடமையாகும். கடமையினின்று தவறுதல் குற்றமாகுமன்றோ! இக்குற்றமுடைய அந்தணரைப் பதராகக் கூறினர். இதனையே,

"காலையும் மாலையும்
நான்மறை யோதா
அந்தணர் என்போர்
அனைவரும் பதரே".

என்ற நறுந்தொகை அடிகள் விளக்கும்.

அந்தணரைக் கூறிய பின்னர் நாட்டிற்கு இன்றியமையாதவன் அரசன் அல்லவா? நெல்லையும் நீரையும் உயிராகக் கொள்ளாது மன்னனையே நாடு உயிராகக் கொண்டு விளங்குகின்றது யாது காரணத்தால்? மன்னன் தன் உயிர்போல் பிறஉயிர்களையும் காத்தலினாலேயே, மன்னவன்எங்ஙனமிருத்தல் வேண்டும்? கடுஞ்சொல் இல்லாதவனாய் விளங்கவேண்டும். குடிகளின்குறைகளைச் செவி கைப்பக் கேட்கும் பொறுமை யுடையவனாய் நிற்க வேண்டும். மக்களின் வருவாய்க்கு தக்கவாறு வரி வசூலிக்கவேண்டும். குடிமக்கள் அழுமாறு வாங்கிய பொருள் அரசன் அழுமாறு செய்யும். ஆகவின் குடிகளின் மனம் கோணாதவாறு வரி வசூல் செய்ய வேண்டும். இவ்வாறன்றித் தன் மனம்போன போக்கெல்லாம் சென்று தன் நலத்தையே பெரிதாகக்கருதும் மன்னவன் எத்தனை நாட்கள் அரசு செலுத்தமுடியும்? அந்நாட்டில் மக்கள் வாழுவரோ? அவர் வாழ்வதைக் காட்டிலும் கொடும்பலி வாழும் காட்டில் வாழ்வது நன்றன்றோ! குடிகளின் கண்ணீர் அரசனை ஒழிக்கும் கரிய வாளன்றோ! அதுபற்றிச் செங்கோலன்றிக் கொடுங்கோலால் ஆட்சி செய்யும் மன்னவன் ஒரு அரசனா? அவன் மூர்க்கனே யாவன். ஆகவே அவனும் பதரேயாவன்.

"குடியலைத் திரந்துவெங்
கோலொடு நின்ற
முடியுடை யிறைவனு
மூர்க்கனும் பதரே"

என்ற அடிகள் விளக்கும்.

அந்தணரையும் மன்னனையும் கூறிய ஆசிரியர் அதிவீராமபாண்டியனார் அடுத்தாற்போல வணிகருள் யாவர் பதர் என்பதைக் கூறுகின்றனர்.

வணிகர் மக்களுக்கு உறுதுணையாவர். நாற்புறமும் சுற்றி ஆங்காங்கு கிடைக்கும் பொருட்களைக் கொண்டுவந்து பிறர் பொருளையும் தம்பொருளாகக் கருதிச் சமன் செய்து சீர்தூக்கும் கோல்போலச் செம்மை நெறியிலிருந்து இம்மியும் பிறழாது வியாபாரஞ் செய்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்பவரே வணிகர். வியாபாரம் செய்தல் எதற்கு? பொருள் பெறுதற்கு. பொருள் எதற்கு இன்பமடைதற்கு. இன்பத்தை எங்ஙனம் அடையலாம்? தான பெற்றபொருளால் தானும் உண்டு, பிறர்க்கும் கொடுத்து வாழ்க்கை நடத்துதலே இன்பமாகும். பல வணிகர் பொருள் ஈட்டுதற்கு முனைந்து நிற்கின்றனரேயன்றித் துய்ப்பதற்கு முனைதலைக் காணோம். இவர் ஈத்துவக்கும் இன்பமறியாத மக்கள் போலும். இவரையும் பதர் என்பர்.

"முதலுள பண்டங்
கொண்டுவா ணிபஞ்செய்து
அதன் பயனுண்ணா
வணிகனும் பதரே"

என்ற அடிகளால் நன்கு விளங்கும்.

அடுத்த நிலையில் நிற்பவர் உலகமாகிய தேருக்கு அச்சாணியன்னவரும் முடியுடை வேந்தர்க்கு முடிதொட்டுக் கொடுக்கும் பெருமையுடையவரும் உயிர்கள் பிழைத்தற்கு முதற்காரணமாக உள்ளவரும் உபகாரம் செய்வதில் பின்வாங்காதவருமாகிய வேளாளர் என்பர்.

இதனாகிய வேளாளர் [illegible] யாது? நிலத்திற்கு [illegible] விதைகளைச் சேகரித்துக்கொண்டு நிலத்தின் ஈரத்தை எதிர்நோக்கிக் கொண்டு இருத்தல் வேண்டும். இரண்டு ஏர்களைக்கொண்டு தொழில் செய்ய முற்படவேண்டும். நன்றாக முயற்சி பெற்றிருக்கவேண்டும், இவ்வளவு பெற்றிருந்தும் மனம் சலியாது இருத்தல் வேண்டும். சிலர் வித்தையும் ஏரையும் அண்மையில் நிலத்தையும், சொற்கேட்கும் ஏவலாளரையும் பெற்றிருந்தும் பொருள் தேடுதற்கு வழியில்லையென்று ஏங்கக் கிடப்பர். இத்தன்மையாளரும் பதரே என்பர்.

"வித்தும் ஏரும்
உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும்
ஏழையும் பதரே"

என்ற அடிகளில் நன்கு விளங்குகின்றது.

இனிப் பதர்வரிசையில்பொதுவாகச் சிலரைச் சேர்க்கின்றார். இல்லறம், துறவறம் என்ற இருபிரிவில் சிறந்தது இல்லறமன்றோ? இல்லறத்தை நல்லறமாக நடாத்துதற்கு முதற்காரணம் இல்லாளன்றோ? இல்லை ஆட்சி செய்யும் தன்மையைக் கொண்டமையின் இல்லாள் என்ற காரணப்பெயர் உண்டாயிற்று. மனை மாட்சிக்கு உறுதுணையாக இருப்பது இல்லாளல்லவா? இத்தகைய மனைவியைப் பெறுதற்கு உற்றார், உறவினர் யாவருங்கூடி, பிறப்பு, நலன், குடிமை, முதலான பத்துப் பொருத்தங்களையும் ஆய்ந்த பின்னர் மணவினை முடிகின்றனர். பின்னர் மனைவி, கணவனவசம் ஒப்படைக்கப்படுகிறாள். கணவனும் மனைவியும் அன்பொத்த மனத்தினராய் நகமும் சதையும் போன்றும், மணமும் மலரும் போன்றும், ஈருடல் ஒருயிர்போன்றும் வாழ்தல் இல்வாழ்க்கை நடாத்தி செல்வருந்தோறும், வருவிருந்து பார்த்திருக்கும் விரதங் கொண்டு வாழ்கின்றனர். இதுவே தமிழர் முறையாகும். சிலர் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வகையறியாது நங்கூரமில்லாது அலைகடலுள் தத்தளிக்கும் மரக்கலம் போல வருந்துகின்ற காலத்துத் திருமணம் என்ற மோகவலையுட் சிக்கி, சீதனம் என்ற பேய்க்கு ஆட்பட்டுப் பெண்ணின் குணத்தை ஆராயாது, பணத்தையே ஆய்ந்து, பணத்தையும் பெண்ணையும் கொண்டு, பணஞ் செலவான பிறகு பெண்ணைத் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டு வாழாவிருக்கின்றனர். இலக்குவில் அழைத்துவர மறுக்கின்றனர். ஊரார் சிரிக்கின்றனர். மணம் என்ற சடங்கு செய்தனனர் பிச்சையெடுத்தாவது இல்வாழ்க்கையை நடாத்துதல் முறையாகவிருக்க, முறையிலிருந்து தவறினால் அவரும் பதரேயவர். இக்கருத்தையே,

"தன்மனை யாளைத்
தாய்மனை யகற்றி
பின்பவள் பாராப்
பேதையும் பதரே'

என்ற நறுந்தொகை தனிலும்,

சிலர் மணஞ்செய்து கொண்டு மனைவி உருவிலும் திருவிலும் மிக்கிருந்து விளங்கினாலும், ஒரு குணமுமின்றி விளங்கும் பொருட்பெண்டிரிடம் செல்லுகின்றனர். இவரும் பதரேயாவர். இதனையே பின்வரும் அடிகள் விளக்கும்.

"தன்மனை யாளைத்
தனிமனை யிருத்திப்
பிறர்மனைக் கேகும்
பேதையும் பதரே"

இதற்கடுத்துப் பொதுவான ஒரு விஷயத்தைக் கூறினர். மக்கள் கடிகாரத்தையும், பேனாவையும், ஒற்றைச்சுவடு வண்டியையும் பிறருக்கு இரவல் கொடுக்காமல் இருத்தல் நாம் கண்கூடாகக் காணக்கூடியதே. ஏன்? இரவல் கொடுத்தால் பொருட்கள் பழுது படுகின்றன. உபயோகிக்கும் முறை தவறிய காரணத்தினால் பொருட்கள் பயனிலவாகின்றன. சாதாரணமாகக் கடன் கொடுத்து வாங்குவதில் எத்துணைக் கஷ்டங்கள் கிடக்கின்றன. கொடுத்த பணத்தைக் கேட்டால் கோபத்திற்குள்ளாகவேண்டியிருக்கின்றது. ஆகவே வரும் செய்யுளில் பலரைப் பதராகக்கூறுகின்றனர். இதனையே,

"தன்னா யுதமும்
தன்கையிற் பொருளும்
பிறன்கையில் கொடுக்கும்
பேதையும் பதரே!

என்ற நறுந்தொகை அடிகள் நன்கு விளக்கும்.

சாம்ராஜ்ய அரசியல் திட்டம் தயாரிப்பதென்று தீர்மானம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ வணிகசேகரா பிறகு பேசுகையில் சுதந்திரப் போராட்டத்துக்குப் பொதுஜனங்களைத் தயார் செய்து அவர்களுடைய பூரண ஆதரவுடன் காரியங்களை நடத்த வேண்டுமென்றும் பிரிட்டனிடம் சுதந்திரப் பிச்சை கேட்பதால் பயனேற்படப்போவதில்லையென்றும் சுயராட்சியோ அல்லது சாம்ராஜ்ய நாட்டு அந்தஸ்தோ இலங்கைக்கு ஏழு கப்பலாவிடில் தலைவர்கள் திட்டமான கொள்கையை ஏற்படுத்திக் கொண்டு போராட்டத்தை நடத்த வேண்டுமென்றும் சொன்னார்.

ஸ்ரீ ஜே. ஆர். ஜயவர்த்தனா பிறகு பேசுகையில் ஒரு காலத்திலே பொதுவுடைமை பரவாதபடி தடுக்க பாஸிஸமே சிறந்ததெனச் சொல்லி முஸோலினியை மிஸ்டர் சர்ச்சில் பழிந்ததாயும், இன்று அதே சர்ச்சில் ஸ்டாலினுக்கு சலாம வைப்பதாயும் சர்ச்சில் முனைக்குப்பின் முரண்பட்டு மனச்சாட்சி இல்லாதவரென்பதற்கு இது ஒரு உதாரணமென்றும் கூறியிடு போராட்டத்துக்குப் பொதுஜனங்களைத் தயாரசெய்ய வேண்டுமென்றார்.

ஸ்ரீ அலுவிகாரா பிறகு பேசுகையில் இதுமாதிரி எத்தனையோ சர்வதிருத்தத தீர்மானங்கள் சபையில் நிறைவேறி உபயோகமில்லாமலே போய்விடுதால் இதுதீர்மானத்துக்கும் தாம வரைகும் கொடுக்கப் போவதில்லை யென்று கூறினார். சிறுபான்மை வகுப்புகளுக்கு விசேஷப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டுமென்று மிஸ்டர் ஜி. ஸி. எஸ். கொரியா பிறகு பேசுகையில் கூறினார்.

ஜனாப் ராஸீக் பிறகு பேசுகையில் புதிய அரசியலில் சோனகர் வகுப்புக்கு குறைந்தது 8 ஸ்தானங்களாவது இருக்கவேண்டுமென்றார். விவாதத்துக்கு மிஸ்டர் டி. பொன்சேகா பதலளித்த பின்னர் சபாநாயகர் மிஸ்டர் வில்லேயினகிருத்தத்தை வாக்குச் சம்மதத்துக்கு விட்டார். அதற்குச் சாதகமாக 4 வாக்குகளும் பாதகமாய் 25 வாக்குகளும் கிடைத்தன. 6 பேர் வாக்குக் கொடுக்கவில்லை. கிருத்தம் தோல்வியடைந்தது.

அப்பால் மிஸ்டர் டி. பொன்சேகாவின் ஆசு தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டு சாதகமாக 26 வாக்குகளும் பாதகமாக 3 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது. 6 அங்கத்தினர்கள் வாக்குக் கொடுக்கவில்லை.

சென்ற திங்கட்கிழமை சபை முல்லா மிஸ்டர் டி. எஸ் சேனநாயகா பேசியபொழுது ராஜீய வாழ்வினிருந்து தாம விலகிக்கொள்ளப் போவதாக ஒரு பாலப் பத்திரிகை பிரசுரித்திருந்த செய்தி உண்மையல்லவென்றும் 'நாட்டுக்கு என சேவை தேவைப்படுகிறவரை நிச்சயம் சேவை செய்வேன்' என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார் பக்தி

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

அடியவர் பக்தி யொன்றினாலே யே முத்தி பெற்றவர் ஆறுபான் மும்மை நாயன்மாருள் அப்பூதியடி களாகும் பெரு மிழலைக் குறும்ப நாயனாருமாம். இவ்விரு பெரி யாரும் முறையே திருநாவுக் கரைசரையும் சுந்தரரையும் வழி பட்டவர்களாவர். பின்வரும் திருத் தொண்டர் திருவந்தாதித் திரு விருத்தங்கள் அவ்விருவர் வழிபாட் டின பெருமையை எடுத்து விளக் கா நிற்கும்:-

அப்பூதி

தனமாவது திருநாவுக் கரசின
சரண மென்று
மனமார் புனற்பந்தர் வாழ்ததி
வைத்தாங்கவன் வண்டமிழ்க்கே
இனமாத தனது பெயரிடப்
பெற்றவ னெங்கள்பிரான்
அனமார் வயற்றிங் களூரினில்
வேதியனப் பூதியே (1)

குறும்பர்

சிறைநன் புனற்றிரு நாவலூ
ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழலுளை யெய்துவிய
னருள் போற்ற வினறே
பிறைநன் முடியனடி யவர்வே
னெனறு உன்பிரிந்தரன
நறைநன் மலர்ததார் மிழலைக்
குறும்பனெனு நம்பியே (2)

இவ்வுணமையையே சிவப்பிரகா சரும தமது நாலவர் நான்மணிமா லையில் பன பின்வருமாறு பாராட்டி யுளளார:

உற்றுனலன் தவம்தீயினின்று
னலனூண் புனலா
வற்றுனல னுகர்வுக திருநாவுக்
காசெனுமோர்
சொற்றுனெழுதியுங் கூறியுமே
யெனனுந் துனபில்பரம
பெற்றுனொரு நம்பி அப்பூதி
யெனனும் பெருந்தகையே (1)

(திருநாவுக்கரசு என்னும் பெய ரையே மாதிரமாகக் கொணடு செ பதத்தினால் முதிபபேது பெறு மாலபது கருதல்)

பெருமிழலைக் குறும்பனும்
பரம யோகி
பெரிது வந்துன் திருவடித்
தாமரையைப் போற்றி
விரைமலர் தூய வந்தனைசெய்
கினறு னென்றால்
விளங்கழை யாரிவரொடு
முயங்கலாமோ
உரைமதி யின்தனை வெறுபப
தெனகொல கின்னை
யுடையானுக் கடுததை செய
துனகுமாயிற்
சுரர் முனிவர் பாவலுறும்
பெருஞ்சீர்த்
தொண்டத் தொகை செய்தா
யறமுதல் நால்வகை செய்தாயிய

பெருமிழலைக் குறும்பர் மகா யோகி. அவர் சுந்தரரை வழிபட்டா ரென்றால சுந்தரரும் யோகியாய் இருததல வேணடுமென்பது சொ லலாமலே அமையும். சிவபெரு மான் உமாதேவியாரை வாம பாகத் திறகொணடும் கங்கையைச் சடை யிற் கொணடும் எப்படிப் பரம யோகி எனக் கருதபபடுகின்றாரோ அஃதே போல் சுந்தரரும் (அவர் தோழராகையால்) கருதபபடுகின்ற னர். அவர் பாவையாரோடும் சங்க லையோடும் சிறறின்பம் அனுபவித் தாரல்லர். 'யோக பரமபரை' யல் முழுகச் சிவானுபவம் அனுப வததார எனபது சிறற்றம். இவ் வுண்மை பெரியபுராணத்தை நுணர ஆராய்வோர்க்கும் புலப் படும்.

நகை அழகு செய்வது மட்டுமா?

(சு. நடராசா)

சவுக்கமாத்தின் இலைகள் காற்றி னால் 'ஸ்...' என்று இரைச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன. சூரியன் மே ற்குத்திசையில் அஸ்தமனமாகின் றான். அவனின் மஞ்சள்நிறக் கிர ணங்கள் கடலின் அலைகளில் பட்டு பொன்மயமாக மிளிர்கின்றது. கா கங்கள் முதலிய பட்சிசாலங்கள் யாவும் இரைதேடிக்கொண்டு தத் தம் குஞ்சுகளுக்குக் கொண்டு செல் கின்றன. மற்றோர்புறம் மாடுகள் பசம்புல்லை மேய்ந்தவிட்டு தாங்கள் உறையும் இடங்களை நோக்கிச் செல் கனறன- இபபடி யிருக்கையில் நானும் எனது நணபனும் அழகிய வெணமணல்மீது உலாவிக் கதைத் துக்கொணடு செலகின்றோம்.

அந்நேரத்தில் அங்கே நின்ற ஜனக்கூட்டததிடை இருகாதலர் களை னினமாக வடக்குத்திசை யை நோக்கிச் சென்றார்கள். அந் தபபெண் அழகுக தெய்வமாகிய ரதிபோல் இருநதாள். அவ்வழகிய பெணணுடன காதலன் எவ்வழவு இனிமையாகவும், அனபாகவும், ஆதரவாகவும் பேசிக்கொணடுசென ருன் எனபதை இங்கு வரணிக்க முடியாது. அதுமட்டுமா? அவளின் கருங்கூந்தலை சூடிய மலைரைப்பூ முல்லைபபூக்கள் மிக அழகாக விள ங்கியது. அவற்றுடன் அபபெண் மணி யணிந்திருந்த ஆபரணங்கள் யாவும் ஆச்சரிய கிரணங்கள் பட் டுப் பளீச் பளீச் எனறு மனனிக் கணகளை மயக்கியது. சிறிது நே த துள் அவர்கள் மறைந்தனர்.

நான் எனது நண்பனைப் பார்த் து, 'இப்படியாக இயறகை அழகு நிறைந்த பெணகட்கு ஏன் ஆப ரணங்கள் அணியவேண்டும்? ஒரு வேளை பொருளுக்கு ஆசைபபட் டார்? அலலது இந்த யுத்தகாலத்தல பவுண இந்த விலை விறகும்போது அதிக நகையிருந்தால் பெறுமதி அதகபபடும் எனறு செய்கின்றன ரா'? என்று வினவினேன். அதறகு நணபன், 'அபபடியலல நணப! காதலன் அபபெணமணியின் மேல உளள மோகததால அவளைத் தன வசமாகக் கட்டுவதறகு முதலில் மங் கள சூதரி ரூபமான மாசகயிற் றை அவளிடமல இட்டான். அம மாது அப்பாசகயிறறுக்கு உட் படமாடடாமனன எணணி நவரத் தன ஆபரண ரூபமாய செய்த ஆணைக் தங்கயாலைகளையும் அவள் கழுததல்பூட்டி, அவள் அலை கட்கும் உட்படாதுவிடினும் கை காலகளிறகு பொன வெளள முந் லாயவறறால விலங்குகளைச் செய்து பூட்டி, ஓட்டியணைததால் இடுப் பை ஆழுததுகட்டியும், மூக்கரங் கயிறுபோனற வளரகை மூக்கில் மாட்டியும் வாய் அதகம் ஆடாமல் இருப்பதறகு அட்டிகையைக் கட் டியும் தனகுள் அடக்கி எஙகும் ஓடவிடாமல் அழைததுச் செலவ தற்கு தனது இடதுகையைக் கூண்டி வரலால் அவளது வலதுகையை லைப் பிடித்து இழுததுக்கொணடு செல்கின்றான்" எனறார்.

பின்பு 'இப்படிப்பட்ட பெண்ணை மோகிப்பதனால அவன் அடையும் பயன் என்ன? சுகமா? அலலது துன்பங்களை யொழிய வேறு ஏதாகிலும் உண்டோ? பெணகட்கு நகை அழகு செய்வதல மட்டுமா?' என்று வினவினேன். நேரம் இராக் காலம் ஆயது நமிருவரும் பிரிந் மது வீடுகளை நோக்கினோம்.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

செவ் நவ 28

காலை: 7-45 நாதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 சுந்தர ஓதுவா மூர்த்தி† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 30 திருக்கோடிகாவல் ஆர்.கோவிந்த ராஜபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய் திகள் 1-40 கே சுந்தராமய்யர் புல்லாங் குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 திருக்கோடிகாவல் ஆர் கோ விந்தராஜபிள்ளை பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 கே சுந்தராமய்யர் புல்லாங் குழல் 6-20 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 கண்கண்டகாட்சி ஹாஸ்யநாடகம் 7.45 தமிழில் செய்திகள் 8 மராமில் உள்ளபடி 9 கர்நாடகராகங்கள் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பர்மாமுனையில் நமது வீரர்கள் ஆங்கிலப் பேச்சு 10 இசைவேளை 10-20 நாராயண வயலின் 10-30 முடிவு.

புதன நவ 29

காலை 7-45 நாதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாரிய கோஷடி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி கே லட்சுமணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய் திகள் 1-10 டி கே லட்சுமணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலி பரப்பு 2.30 முடிவு.

மாலை 5 கண்டதேவி எஸ் அழகிரி ஸ்வாமி வயலின் 5-40 இசைப் பயிற்சி 6 குரலிசை 6-15 இலக்கியவாசகம் 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 யுத்தகால சேமிப்பு பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 நாகஸ்வரம் 7-45 தமிழி செய்திகள் 8 திருகானம் 8-30 கண்டதேவி எஸ் அழகிரிசாமி வயலின் 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பருவர்கள் ஆடுவிலாடகம் 10 ஐரோபபிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன நவ 30

காலை: 7-45 நாதாரம்பம் † 7-50 தமிழில செய்திகள் 8 பிரபாவதி† 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 எல் சுசீலாதேவி வீணை 9 முடிவு.

1 கதமபம 1-30 ஆங்கிலத்தில் செய் திகள் 1.40 கே வி சுப்பிரமணியம் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எல சுசீலாதேவி வீணை 5-40 இசைப்பயிற்சி 6 கே வி சுப்பிரமணியம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 குரல்வளை† 7-45 தமிழில செய்திகள் 8 மராமி பாடல் பொதுப்பு

8-15 சீர்காழி கே சதாசிவம்பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மனிதனும் மனமும் ஆங்கிலப் பேச்சு 10 இசைவேளை 10-20 டி சௌடையா வயலின்† 10-30 முடிவு.

புங்குடுதீவு கலாவிருத்திச் சங்கம்

புங்குடுதீவு வாசிகள் உயர்தர ஆங்கிலப்பாடசாலை ஒன்றை நிறுவு பிப்பதையிட்டும் அது செவ்வனே நடைபெறத்தக்க வழிவகைகள் எங் ஙனம் கைவரலாம் என்பதுபற்றி யும் தீர்மானிப்பதற்காக ஓர் ஆலோ சனைக்கூட்டம் புங்குடுதீவு கிராமச் சங்க மண்டபத்தில சமீபமாக நடந் தது, ஆலை இலங்கைப் புங்குடுதீவு மகாசபைத் தலைவர் திரு. க. அம பலவாணர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் புங்குடுதீவை உயர்தர ஆங்கில பா டசாலை ஸ்தாபிப்பதன் நோக்கத் தையும் சர்வகலாசாலைக் கல்வி பெ றுமவரை ஆயலூருக்கு வரவேண் டிய அவசியமில்லை யென்பதையும் அரசினர் வகுத்த முறையில் நட் டங்களை வகுப்பினும் நாம அதற்கு உரிமையாயிருந்து கலை வளர்ச்சி யடையவேண்டிய எதனங்களை சுயமாய்ச் செய்யக்கூடுமென்பதையும் எடுத் துக்காட்டினார். அவர் மேலும் கூறியதாவது:—

புங்குடுதீவுக் கலாவிருத்திச் சங் கமானது ஒரு சங்கமாக அமைய அரசினரால சட்டத்தின்மூலம் அங்கீகரித்து பதிவுசெய்யப்பட் டிருப்பதும், தனி யாழ்ப்பாணச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை ஒத்ததாய இலவசக முழுவதிலும் கலை ஊரபரவுகளை ஆகதும் மோகமின்றி புங்குடுதீவினும் அதன் அயல் தீவுகளிலுமுளள கலைக் குறைவை நிவிரததித்து விரைவுமாய புங்குடுதீவில ஓர் உயர் தர ஆங்கில பாடசாலையை நிறுவு தலே இதன் பிரதம நோக்கமாகும்.

இச்சங்கத்தின பெறுமதி மொத் தம் குறைந்தது ரூ. ஒரு லட்சமா கும்.

இச்சங்கத்துக்கு மூன்று அல் லது ஐந்துபேர் கொணட ஒரு நம் பிக்கை சபையினர் நியமிக்கப்படு வர்.

இந்த யோசனைகள் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன. நிலமும் பணமும் கொடுத்து உதவ பலர் முனவந்தனர். கட்டிடங்களை முடிப் பதறகு ஓர் உபசபை நியமிக்கப் பட்டது.

மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாகடர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றுகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதா ரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கறப ஸ்திரீகளுக்கு ஆரம்பத் திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கறப வியாதிகளைக் குணப்படுத்துவதுமலலாமல் இரத் தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல் களையும் கறப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கறபகாலங்களில இத்தைலம் விலாதுகத தகாக ஒரு வரப்பிரசாதமாகும். நூறறுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பாவைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அண்டு சன்ஸ். கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொனசிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: சிறறிடிஸ பெனஸறி

பெருந் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—

வானமுகில வழாதுபெயக மலிவளஞ் சுரக்க மனனன
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழக!
நானமறை யறங்களோங்க நறறவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 27, November, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org